ஜெம்ஸ் சத்தம்

Since 1972

ஜீலை 2017

மோத்திகாரி பணித்தள சிறுவர் ஊழியங்கள்

ஜெம்ஸ் சத்தம்

GEMS Satham

Transforming Peoples to Transform Nations

Since 1972

அன்பின் மடல்

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

பூரணப்படுத்தும் பிதா – 10

'பட்கா பத்வா' பணித்தள ஊழியங்கள் – 14

வேதாகம பயிற்சி முகாம் – மகாராஷ்டிரா – 15

விசுவாசிகள் பயிற்சி முகாம் – 16

பணித்தளச் செய்திகள் – 18

முன்னேற்றப் பணி முகவரிகள் – 29

Published by

Gospel Echoing Missionary Society

Regd. office :

GEMS Educational Media Services
11,13th Cross street, New colony,
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

Field office :

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

'ஜெம்ஸ்' என்பது,

Gospel Echoing Missionary Society

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்சிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

சோர்ந்துபோகிறவனுக்கு பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறவரின் நாமத்தில் வாழ்த்துக்கள் (ஏசா. 40:29). நம்முடைய ஆண்டவர், மங்கி எரிகிற திரியை அணையாதவர் என்றும், நெரிந்த நாணலை முறிக்காதவர் என்றும் நாம் அறிந்திருந்தாலும் (ஏசா. 42:3), இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல அழைக்கிறவர் என்று அறிக்கையிட்ட போதிலும் (ரோமர் 4:17), நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள், ஆகிலும் பள்ளங்கள் எல்லாம் நிரம்பும் என்கிற அறிவைப் பெற்றிருந்தபோதிலும் (2இராஜா. 3:17), எரேமியா தீர்க்கதரிசியைப்போல, ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ் செய்கிறவர்கள் சுகித்திருக்கிறது என்ன? (எரே. 12:1), என்ற கலக்கமான வார்த்தைகள், தேவ பிள்ளைகள் அநேகரின் வாயில் புறப்படுவதனைக் காணமுடிகிறது.

நம்மைச் சுற்றி நடக்கிற அநேகக் காரியங்களை நாம் காணும்போது, உண்மையான தேவபிள்ளைகள் கொஞ்சம் சோர்வுற்றுக் காணப்படுவதும், தளர்ந்துபோவதும், உற்சாகம் இழந்துபோகிறதும் சாதாரணமாக நடைபெறுகிறது.

ஆனால், தேவனை அறிந்த நாம் எந்த சூழ்நிலைகளில் தன்னை இப்படி அடையாளப்படுத்தினார் என்பதனை கவனித்தால் புது உற்சாகம் பிறக்கும், புத்துணர்ச்சியுடன் நாம் செயல்பட நம்மை உந்துவிக்கும் என்பதனால் இந்த மடலை எழுதுகிறேன்.

தேசத்திலும், சபையிலும் நடக்கும் சில நிகழ்ச்சிகள் நம்மை திக்குமுக்காட வைப்பது உண்மைதான்; உலகத்தின் காரியங்கள் நம்மைக் கதிகலங்கச் செய்யப் போதுமானவைகள்; ஆயினும், இஸ்ரவேலின் நம்பிக்கையும், ஆபத்துக் காலத்தில் அதன் இரட்சகருமான அவர் (எரே. 14:8), நமக்கு இரங்குவார். யுத்தத்தில் இணைந்து செயல்பட **மூன்று இராஜாக்களும் ஏழு நாட்கள்** தண்ணீர் இல்லாமல் சுற்றித் திரிந்து தண்ணீர் கிடைக்காமல் அலறும் நேரம் ஒரு **நம்பிக்கையற்ற நேரமே** (2 இராஜா. 3:9,10); ஆனால், ஒரு இரவுக்குள் பெரும் மாற்றம், தண்ணீர் வந்தது; எதிரியும் முறியடிக்கப்பட்டான். **நம்பிக்கையை இழக்கும் நேரத்தில்தான் நம்முடைய ஆண்டவர் தீவிரமாய் செயல்படுகிறார்**. (2 இராஜா. 3:20,24)

நாற்பது நாட்கள் தொடைநடுங்கி, பெலன் குறுகி நின்ற இஸ்ரவேலின் சேனையும் இராஜாவும் (1 சாமு. 17:11), **தாவீது களத்தில் இறங்கும் வரை நம்பிக்கையற்ற வார்த்தைகளையே தமதாக்கிக்கொண்டிருந்தனர்**. (2 சாமு. 17:53)

ஜார்கண்ட் மாநிலத்தில் “சர்ணா” இயற்கை வழிபாடு செய்வோர் என்ற மத நம்பிக்கையுடையவர்களிலிருந்து இரட்சிக்கப்பட்ட குடும்பம் பயமுறுத்தப்பட்டது, தண்ணீர் மறுக்கப்பட்டது, கொலை வெறி கும்பல் தாக்கியது; ஆயினும், விசுவாசத்தில் உறுதியாய் நின்ற அந்த குடும்பத் தலைவனும் மனைவியும் நடுங்கும் குளிரில் இரவு 9 மணி முதல் காலை 4 மணி வரை குளிர்ந்த குளத்தில் கழுத்தளவு தண்ணீரில் நிற்கவைக்கப்பட்டனர்; விளைவு, அவனுக்கு பக்கவாதம் வந்தது, மரணமும் நேரிட்டது. அவனை அவனுடைய நிலத்தில்தானும் புதைக்கவிடவில்லை. ஆயினும், அவனுடைய மகள் பிந்தேஸ்வரியையோ மற்றவர்களையோ சத்துருவினால் ஒன்றும் செய்யக்கூடாமற் போயிற்று. அவர்கள்

விசுவாசத்தினை விட்டுவிட ஆயத்தமாயில்லை. **மரணம் நேரிடுவதாயினும், தங்கள் ஜீவனையும் பாராமல் நின்றவர்கள் சத்துருவை ஜெயித்தார்கள்** என்ற வசனத்தின்படியே (வெளி. 12:11), ஜெயம்பெற்றவர்களாய் நிற்கிறார்கள்.

"இந்திய தலைநகர் டெல்லியில் வழியில் சிறுநீர் கழித்த வாலிபர் இருவரை கண்டித்த ஆட்டோ டிரைவர் அடித்துக் கொல்லப்பட்டார்" என்ற செய்தி **இந்திய தேசம் சகிப்புத் தன்மையை** (tolerance) **முற்றிலும் இழந்துவிட்டது** என்றே தோன்றுகிறது. மாட்டிறைச்சி வைத்திருந்தவர்கள் அடிக்கப்படுவதும் ஏன் கொல்லப்படுவதும் அன்றாட நிகழ்ச்சி ஆகிவருகிறது.

சபைக் கூட்டங்களில் கலாட்டா செய்வதும், தடைசெய்ய முயற்சிப்பதும், ஜெபக்கூட்டங்களை மத மாற்றம் என்று பேரிட்டு அழைப்பதும் தேசமுழுவதும், தமிழகத்திலும் கூட அன்றாட நிகழ்வுககள் ஆகிவரும் நேரமிதுதான். எதிரியின் கூப்பாடு, சின்னச் சின்ன கிறிஸ்தவ நிகழ்ச்சிகளையும் நடைபெறாமல் செய்ய அரசும் காவல் துறையும் உதவும் அளவுக்கு நித்தம் நிகழ்கிறது.

இதற்கு மத்தியில் "சபையின் நிலையை" கவனித்தால், அதனுடைய சாரமற்ற ஆராதனைகளும், சத்துவமற்ற சடங்காச்சாரங்களும், கொள்கையற்ற தலைமைகளும், அர்த்தமற்ற இசையோடு கூடிய பாடல் என்ற கூப்பாடுகளும், நோக்கமற்ற விழாக்களும், தேவனற்ற தேவ பணிகளும், எதற்கும் பயப்படாத மோசடிக்கும்பலின் சூழ்ச்சிகளும், நம்மை கொஞ்சம் சோர்வுறச் செய்கிறதுதான். இதனூடே கள்ளத் தீர்க்கதரிசனங்கள் மற்றும் மலிவான உபதேசங்களும் தங்கள் ஆதிக்கத்தை செலுத்திவருகின்றன.

ஆனால், கொள்கை விபரீதங்கள் ஆதி சபையில் உண்டானபோது, குதித்தெழுந்த தேவமனிதர்களின் செய்கையால் "சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின" என்பதே சாட்சி (அப். 16:5). 15-ம் அதிகாரத்தில் காணப்படும் காரியங்கள் இளஞ்சபையை கலக்கமுள்ளதாக்கின நேரத்தில், **தேவ ஆலோசனையும் தைரியமும் இதனைச் செய்ய முடிந்தது**. (அப். 15. 24-29)

பேதுருவை சிறையில் அடைத்தபோது, திருச்சபை ஆதரவற்று நின்றது போன்ற காட்சி நம்மைச் சிந்திக்க வைக்கலாம். ஆனால், முடிவு **"தேவவசனம் வளர்ந்து பெருகிற்று"** என்பதே. (அப்.12:24)

சவுலினால் சபை தேசங்களில் சிதறடிக்கப்பட்டது. உபத்திரவம் பின் தொடர்ந்தது உண்மைதான்; ஆனால், முடிவு **"சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்"** என்பதே. (அப். 8:1,4)

எபேசு பட்டணத்தில் எழுந்த எதிர்ப்பு "பட்டணம் முழுவதையும் கலக்கமுறச் செய்தது (அப். 19:29). ஆனால், எபேசு சபையை **மகிமையான சபையாக நிறுத்திற்று** என்பதற்கு எபேசியர் நிருபம் ஓர் சான்று.

"உபத்திரவமும், கொள்கை மாறாட்டங்களும் ஒருபோதும் சபை வளர்ச்சியை நிறுத்திவைக்கவில்லை என்பதே சரித்திரம் கூறும் உண்மை."

வேலையில்லா நிலை அநேக இளைஞர்களை நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளிவருகிறது. வெளிநாட்டில் வேலை செய்தோரும் உள் நாட்டில் கல்வி கற்று வெளியே வந்தோரும் வேலை தேடித் திரிவதைக் காணுங்கால் ஏமாற்றமே. நம்பிக்கையின்மை (Desperation) தேவனை மறுதலிக்கவே தூண்டும் ஓர் கருவி. ஆனால், அதனையே தேவன் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளவும் போதுமான வல்லமை உள்ளவர். ஊடக வளர்ச்சியும் உதவவில்லை. எனவே, கர்த்தரே எனக்குத் தஞ்சம் என்ற வார்த்தைகள் அவர்கள் வாயில் புறப்பட ஏதுவுண்டு. **'Desperation many times leads to destination".**

நம்பிக்கையற்ற இரவில்தான் ஆண்டவர் ஆபிரகாமுக்கு நட்சத்திரங்களைக் காண்பித்து எண்ணச் சொல்கிறார் (ஆதி. 15:3,5). **விசுவாசமும் கீழ்ப்படிதலும் இணைந்துகொண்டது; நிறைவு** உபா. 1:10 -ல் காணப்படுகிறது.

எகிப்தின் கொடூர சட்டங்கள் அவனுக்குத் தேவன் தந்த வாக்குத்தத்தங்களை மேற்கொள்ளக் கூடாதவைகளே. (யாத். 1:12,2)

கிதியோனின் பயத்தினைப் போக்க தேவன் அவனுக்கு 7 முறைகள் அடையாளங்கள் காட்டி அரவணைக்க வேண்டியிருந்தது

(நியா. 6:17,23,31,34,37,39, 7:10). அவ்வளவான நம்பயியலாத சூழ்நிலை (Desperate Situation). முடிவு எதிரி முறியடிக்கப்பட்டான். திடன் கொள்வோம், “பயப்படாதே சிறுமந்தையே உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்” (லூக். 12:32)

தேவனுக்கு தேவை அவரை முழு மனதோடு தேடுகிறவர்களும் அவருக்காக துணிவுகொள்ளுகிற சிலருமே.

தவழும் குழந்தை சபை தெசலோனிக்கேயாவிலே, பவுலே உபத்தரவங்களினால், அவர்கள் அசைக்கப்பட்டுப்போவார்களோ என அஞ்சுகிறார் (1தெச. 2:5). ஆனால், நடந்தது என்ன? அதுவே அனைவருக்கும் மாதிரி சபை (1தெச. 1:7), அவர்களே மற்றவர்களுக்குத் தைரியஞ் சொல்ல உபயோகப்பட்ட உபகரணங்கள். (2தெச. 1:4)

ஒருபுறம் "வியாபாரமயமாக்கப்பட்ட கிறிஸ்தவ சபைகள்" பெருகுவது போலக் காணப்பட்டாலும் உண்மை சபை வளர்ந்து வருகிறது. பாகாலுக்கு முத்தமிடாதிருக்கிற 7000 பேர் எலியா கர்மேல் பர்வதத்தில் சவாலிடுகையில் கண்ணுக்குத் தெரியாதவர்களே!

“இந்த நாள் நெருக்கமும், கண்டிதமும், தூஷணமும் அனுபவிக்கிற நாள்; பிள்ளைப் பேறு நோக்கியிருக்கிறது; பெறவோ பெலன் இல்லை” என்றுதான் புலம்பினான் எசேக்கியா ராஜா. (ஏசா. 37:3). ஆனால், தேவதூதன் ஒருவனுக்கு முன் நிற்கவில்லை எதிரியின் சேனை. ஒரே இரவில் லட்சத்து எண்பத்தையாயிரம் பேர் கொல்லப்பட்டனர். (ஏசா. 37:36)

எனவே, தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துவோம். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும் பதிலளிக்கவும் வருவார்; வந்து உங்களை இரட்சிப்பார் என கூற புறப்படுவோம் (ஏசா. 35:3,4). **உலர்ந்த எலும்புகள் உயிர் பெறும், ஒன்று கூடும். தீர்க்கதரிசிகள், நம்பிக்கையிழக்காதோர், ஆவியினால் நடத்தப்படுவோர், மீண்டும் மீண்டும் அவருக்கு கீழ்ப்படியக் கற்றுக்கொண்டோர்**

ஆவியானவரின் ஒத்தாசையுடன் இதனை செய்ய பெலன் பெறுவர் (எசே. 37:1-14). **அந்த மனிதர்களைத்தான் தேவன் எதிர்பார்க்கிறார். நீங்களாக நானாக ஏன் இருக்கக்கூடாது!!**

- நம்முடைய **Missionary Preparatory Training Course (MPTC)** க்கு அனைத்து தேசங்களிலும் பெரிய வரவேற்பு உள்ளது. பயிற்சி பெறுவோரின் செயல்பாடுகள் நம்மை மென்மேலும் உற்சாகப்படுத்துகிறது. இன்னமும் பல தேச எல்லைகளில் ஆரம்பிக்கிறோம் சகோ. ஐசக் ஜெயக்குமாரின் இடைவிடா முயற்சி பாராட்டுதற்குரியது.
- **இலங்கையின்** வெள்ளப்பெருக்கும் நிலச்சரிவுகளும் நம்மை துக்கத்தில் ஆழ்த்தியது. 200 க்கும் மேற்பட்டவர் மரித்தனர். தென்பகுதி மக்களுக்காக ஜெபிப்போம்.

இதன் மூலம் தென் மாவட்டங்களில் ஆண்டவரின் பணிக்குக் கதவுகள் திறப்பதாகத்தான் நான் உணர்கிறேன். இலங்கை சபைகள் விழித்தெழட்டும்.

- நம்முடைய சிக்கரியா, ரேணுகுட் ICSC, ISC பிள்ளைகள் அனைவரும் **100% தேர்ச்சி** அடைந்ததோடு, நல்ல மதிப்பெண்களோடு தேவனுக்கு மகிமை சேர்த்தனர்.
- **கோலாப்பூர்** (மஹாராஷ்டிரா) கூட்டங்களில் தேவ மகிமை வெளிப்பட்டதினால், GEMS ஊழியங்கள் இந்த மாநிலத்தில் **ஒரு நல்ல முன் மாதிரி ஊழியம்** என்பது புலப்பட்டது.
- நம்முடைய **GEMS-Karnataka** சகோதரர்களின் முயற்சியினால் மைசூர், சென்னாப்பட்டணா, சிக்மகளூர், சிமோகா, சுரேசிகரா போன்ற பட்டணங்களின் எழுப்புதல் கூட்டங்கள் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கானவர்களை தேவனுக்கும் தேவ ஊழியத்திற்கும் அர்ப்பணிக்க வைத்தது. **வறண்ட பகுதிகளில் நீர் ஊற்று எழும்பியது.**
- என்னுடைய 34 செய்திகள் (தமிழிலிருந்து கன்னட மொழியில்) **PEN-DRIVE** ல் வெளியிட்டதினால் தொடர்ச்சியான செய்திகள் வீடுகளிலும், வாகனங்களிலும் தொனிக்க

தேவன் உதவினார்.

- சகோ. ஜேசுதாசும், சகோ. அக்னலும் தாங்கள் விட்டுப்போன பணிகளைத் தொடர திரும்ப வந்து சேர்ந்தனர். **சிதறுண்டவர்களை கர்த்தர் சேர்க்கிறார்**.
- **நேப்பாள்** ஊழியத்திலும் கடந்து சென்றவர்கள் திரும்ப இணைந்து செயல்பட கதவுகள் திறந்தன.
- **GEMS - Web TV** தொடங்கும் முயற்சியில் முழுமையாய் முனைந்துள்ளோம். புரட்சிகரமான இந்த காரியம் நடைபெறுவது தேவ ராஜ்யத்தினை ஸ்தாபிக்க, (தமிழ் இந்தி மொழி பேசுவோர் மத்தியில்) அதிக பிரயோஜனப்படும் என நம்புகிறோம் ஜெபியுங்கள்.
- **பெத்தியாவில்** பெண்கள் தலைமைத்துவ பயிற்சி நிலையம் **(Women leaders training centre)** ஜுலை மாதம் 3 ம் தேதி திறந்துவைக்கப்பட உள்ளது. அநேக தெபோராக்களை எழுப்ப ஜெபியுங்கள்.
- **தர்பங்காவில்** ஜுலை 5 ம் தேதி புதிய ஆங்கிலப் பள்ளி ஆரம்பிக்கப்பட உள்ளது.
- **மாதம் இரு முறை ஏதாவது இடங்களில்** சபை கட்டடங்களைத் திறந்துவருகிறோம். இன்னமும் அநேக சபைக் கட்டிடங்கள் கட்டப்பட ஜெபியுங்கள்.
- இந்த இதழ் உங்கள் கையில் இருக்கும்போது, நம்முடைய பொதுக்குழு, செயற்குழு கூட்டங்கள் பீகாரில் முடிவுபெற்றிருக்கும். ஜுலை மாதம் முதல் Dr.**அசோக் இணை பொதுக் காரியதரிசியாகவும்** (Associate Gen. Seceretary), **சகோ. எமர்சன் நிர்வாக இயக்குனராகவும்** (Exe. Director) பொறுப்பேற்கிறார்கள். பெருகிவரும் ஊழியத்தினால் இப்படி செய்ய தேவன் வழிநடத்தினார் ஜெபத்தில் தாங்குங்கள்.
- எப்போதும் போல் அறுவடைப் பணிக்கு இன்னமும் **ஆட்கள் தேவை**. தேவனை அறிந்தவரும், அழைக்கப்பட்டவரும் தாமதியாமல் ஓடிவர ஜெபியுங்கள்.

குன்றிடமாட்டோம் குனிந்திடவும் மாட்டோம்
குறை நீக்கும் இரட்சகர் கூட இருப்பதால்
குழப்பமிகு நாட்கள்தான் நாட்டிலே
கும்மாளம் போடுகிறான் எதிரியும்
குட்டுபவர்கள் எண்ணிக்கை பெருகுதே
குற்றங்கள் தேவ சபையிலும் பெருகிவிட்டதால்
குரல் கொடுக்கவும் தயங்குதே தேவசபை

குயவன் கையில் தன்னை தந்தோர் யார்?
குறிவைத்து எதிரியை தாக்க பெலன் பெற்றோர் யார்?
குள்ள நரிகளைப் பிடித்துப் பற்றவைப்பவர் யார்?
குருட்டாட்டம் பிடித்தோரை நடத்திச் செல்பவர் யார்?
குழியில் விழுந்து சாவோரை மீட்பவர் யார்?
கும்பிட்டாலும் மட்டும் போதுமோ வாழ்வில்
குருசில் தொங்கினவரை தூக்கிப் பிடிப்போர் அல்லவா?

குடியிருப்புகளை சிறையிருப்பாக்க வேண்டாம்
குணசாலிகளாய் சோம்பலைக் களைவோம் வீறுகொள்வோம்
குமாரன் இயேசுவின் சாயலைத் தரித்து
குருதி சிந்தியவரின் கட்டளை தலைமேற் கொண்டு
குறுகிய காலம்தான் மீதியுள்ளதென எண்ணி
குதூகலமாய் புறப்படுவோம் பணி செய்திட
குறைவில்லாமல் காப்பார் கூடவே வருவார்.

அறுவடைப் பணியில்
அன்பு சகோதரன் D. அகஸ்டின் ஜெபக்குமார்

பூரணப்படுத்தும் பிதா

எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன். (சங்கீதம் 57:2)

தாவீது சவுலுக்குத் தப்பியோடி கெபியில் ஒதுங்குகையில், தனக்கு நஷ்டம் நேரிடாதபடி **"அல்தஷ்கேத்"** என்னும் வாத்தியத்தில் வாசிக்க தாவீது பாடி இராகத் தலைவனுக்கு ஒப்புவித்த **"மிக்தாம்"** என்னும் இந்த சங்கீதம், இரண்டு காரியங்களை வெளிப்படுத்துகின்றது. தாவீது பாடலை இயற்றுகிறவன் மாத்திரமல்ல, அந்த பாடலை எந்த வாத்தியத்தில் வாசிக்கவேண்டும் என்று இராகத் தலைவனுக்கு எடுத்துச் சொல்பவன். வயலின், ஹார்மோனியம், கிட்டார் மற்றும் புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளை நாம் அறிந்திருக்கிறோம். "செனாய்" என்ற இசைக்கருவின் ஓசையை இந்திய வானொலியில் கேட்டால், யாரோ முக்கியமான நபர் ஒருவர் இறந்துவிட்டார் என்று தோன்றும். அப்படியே, நாதஸ்வரத்தின் இசையினை தமிழகத்தில் கேட்டால், ஏதோ ஓர் மங்களகரமான நிகழ்வு நடைபெறுகிறதாக உணர்ந்துகொள்ள முடியும். புல்லாங்குழலின் ஓசை காலைப் பொழுதை நமக்கு வெளிப்படுத்தும். வாத்தியக் கருவிகளின் ஓசைகள் சூழ்நிலைகளை நமக்கு வெளிப்படுத்தக் கூடியவைகள்.

அப்படியே, "அல்தஷ்கேத்" என்னும் வாத்தியக் கருவி வாசிக்கப்படும்போது, எந்த சூழ்நிலையில் வாசிக்கப்படுகின்றது என்பதை ஜனங்கள் அறிந்துகொள்ள முடியும். அத்தோடு, "மிக்தாம்" என்ற தலைப்புடன் இந்த சங்கீதத்தை தாவீது எழுதுவதின் அர்த்தம், **"கெடுத்துப்போட்டுவிடாதே"** (destroy not) என்பதே. எந்த சூழ்நிலையில் இந்த சங்கீதத்தை தாவீது எழுதுகிறான் என்பதை நாம் அறிந்துகொண்டால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் இந்த சத்தியம் பெலம் சேர்க்கும்.

தாவீது சவுலுக்குப் பயந்து கெபிகளில் ஒளித்துக்கொண்டிருந்தான்.

எந்தக் கெபியின் பக்கங்களில் தாவீதும் அவன் மனுஷரும் உட்கார்ந்திருந்தார்களோ, அந்தக் கெபியிலேயே சவுல் மலஜலாதிக்குப் போனான் (1சாமு. 24:3). சவுல் குகைக்குள் சென்றபோது, அவனது வஸ்திரத்தின் தொங்கல், தாவீதின் கண்களில் பட்டது. மலஜலாதிக்குச் செல்லும் நேரத்தில் ஆயுததாரி ராஜாவோடு உடன் செல்வதில்லை. சவுலின் நிமித்தம் தாவீது குகைகளில் வீட்டை விட்டு ஒளியவேண்டியதாயிருந்தது. 200 பெலிஸ்தியர்களைக் கொன்று, ஜீவனை பணயம் வைத்து சவுலின் மகளைத் திருமணம் செய்திருந்தபோதிலும், மாமனாகிய சவுலுக்குப் பயந்து வீட்டை விட்டே ஓடி குகைகளில் தங்கவேண்டியதாயிருந்தது. வீட்டுச் சாப்பாடு இல்லை, சுகம் இல்லை, சரியான தூக்கம் இல்லை; இவை அனைத்திற்கும் காரணம் சவுலே. இப்போதோ வாளும் ஈட்டியும் இன்றி குகையில் சவுல் தனியாக இருக்கிறான். மேலும், சால்வை ஒன்றை மட்டுமே உடலின் மேல் போட்டுக்கொண்டவனாகவே குகையில் சவுல் காணப்பட்டான். சவுலின் சால்வையை தாவீது இழுத்து வைத்துக்கொண்டாலும், நிர்வாணமாக சவுல் எங்கேயும் ஓடமுடியாது. சவுலைக் கொன்றுபோடவோ, அவமானப்படுத்தவோ ஏற்றதோர் சந்தர்ப்பம் தாவீதுக்குக் கிடைத்தபோதிலும், **"கெடுத்துப்போட்டுவிடாதே"** என்ற சத்தம் தாவீதின் காதுகளில் தொனித்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் கர்த்தருடைய சத்தத்தை தாவீது கேட்டபோது, அவனது உள்ளத்தில் எழும்பின பாடலே இந்த 57-வது சங்கீதம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் "கெடுத்துப்போட்டுவிடாதே" என்ற சத்தம் ஆவியில் கேட்கும்போது நமது நிலை என்ன? **நமக்கு விரோதமாக எழும்பும் காரியங்களை அழித்துப்போட ஏற்றதோர் வாய்ப்பு கிடைக்கும்போது, ஆண்டவர் என்ன சொல்கிறார் என்பதை ஆவியில் உணர முற்படுகிறோமா?**

என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார்; (சேலா.) தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார். என் ஆத்துமா சிங்கங்களின் நடுவிலிருக்கிறது; தீயை இறைக்கிற மனுபுத்திரருக்குள்ளே கிடக்கிறேன்; அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளும், அவர்கள் நாவு கருக்கான பட்டயமுமாயிருக்கிறது. என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள்; என் ஆத்துமா

தொய்ந்துபோயிற்று; எனக்கு முன்பாகக் குழியை வெட்டி, அதின் நடுவிலே விழுந்தார்கள் (சங்கீதம் 57:3,4,6) என்று தன்னுடைய ஆபத்தான சூழ்நிலையை தாவீது எழுதுகிறான். கண்ணிகள், குழிகள், விரியன் பாம்புகள் மற்றும் சிங்கங்களைப் போன்றவர்கள், நான்கு புறமும் அம்புகள் பட்டயங்கள்; இவைகளுக்கு மத்தியிலும் சத்துருவை அவமானப்படுத்தவும், வீழ்த்தவும் ஏற்றதோர் சந்தர்ப்பம் தாவீதுக்குக் கிடைத்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும், “மிக்தாம்” (கெடுத்துப்போட்டுவிடாதே) என்ற சத்தம் தாவீதின் காதுகளில் தொனித்தது.

“உனக்காக யாவையும் நான் செய்துமுடிப்பேன்” என்ற கர்த்தரின் சத்தம் தாவீதை தடுத்து நிறுத்தியது. ஒருபுறம் விரோதியான சவுல், மற்றொருபுறத்திலோ கர்த்தருடைய சத்தம். **தாவீதின் ஆவிக்குரிய வாழ்க்கையை பூரணப்படுத்த சத்துருவாகிய சவுலையும் தேவன் உபயோகித்தார்**. தீயை இறைக்கிற, விரோதமாக எரிந்துவிழுகிற மனிதர்கள் மூலமாகவும் தேவன் நமது ஆவிக்குரிய வாழ்க்கையை பரிபூரணப்படுத்த முடியும்; **நம்மை பரிபூரணப்படுத்துவதே பிதாவின் நோக்கம்**. கர்த்தரின் சத்தத்தை புரிந்துகொண்டவனாக, உணர்ந்துகொண்டவனாக, ஏற்றுக்கொண்டவனாக தாவீது பாடும்போது, ஆனந்த தொனி அவனுடைய வாயிலிருந்து புறப்படுகிறது.

என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக்கீர்த்தனம்பண்ணுவேன். என் மகிமையே, விழி; வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்: அதிகாலையில் விழித்துக்கொள்வேன் என்று பாடுகிறான் (சங்கீதம் 57:7,8). “அல்தஷ்கேத்” என்ற ஒரே ஒரு வாத்தியக் கருவியில் வாசிக்கும்படி பாடலை எழுதத் தொடங்கிய தாவீது, இப்போதோ, வீணையே சுரமண்டலமே விழியுங்கள் என்று பிற இசைக் கருவிகளுக்கும் அவரைப் பாடி கீர்த்தனம்பண்ணும்படி அழைப்பு கொடுக்கிறான். மேலும், ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன்; ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன் (சங்கீதம் 57:7-9) என்று சந்தோஷத்துடன் பாடுவதற்குக் காரணம், “அவர் தனக்காக எல்லாவற்றையும் செய்து முடிக்கிறவர், தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை பூரணப்படுத்துகிறவர்” என்பதை அவன் தன் வாழ்க்கையில் அறிந்துகொண்டதினாலேயே.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையைப் பரிபூரணப்படுத்த, சத்துருக்களையும், விழுங்கப் பார்க்கிறவர்களையும், நிந்திக்கிறவர்களையும், சிங்கங்களைப் போன்றவர்களையும், தீயை இறைக்கிற மனிதர்களையும், ஈட்டிகளும் அம்புகளுமானவர்களையும், குழியை வெட்டுகிறவர்களையும் ஆண்டவர் உபயோகப்படுத்தக் கூடும். தாவீதின் வாழ்க்கையோடு, நம்முடைய வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்ப்போமென்றால், நாமும், தாவீதைப் போல குதித்து, நடனமாடி, ஆனந்த தொனியோடு ஆண்டவரைப் பாடிப் புகழ முடியும்.

எதிரியைக் நிர்மூலமாக்கிப்போட ஏற்றதோர் சந்தர்ப்பம் தாவீதுக்குக் கிடைத்தபோதிலும், தன்னுடைய உள்ளத்தில் கேட்கும் ஆண்டவருடைய சத்தத்திற்கே தாவீது செவிகொடுத்தான். எனவே, தேவனுடைய கிரியைகளை தனது வாழ்க்கையில் தாவீது காணமுடிந்தது.

நம்முடைய நிலை எப்படியாயினும், ஆண்டவரை அறிந்துகொள்வதே நம்முடைய ஆவலாயிருக்கவேண்டும். சத்துருக்களால் சூழப்பட்ட நிலையிலும், உன் தேவன் எங்கே? (சங். 42:3) என்று சத்துருக்கள் நிந்தித்துக்கொண்டிருந்த வேளையிலும், “மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது” (சங். 42:1) என்றே தாவீது தன்னுடைய நிலையைக் குறித்து வர்ணித்துத் சொல்லுகிறான். தாவீதோ, இளைப்பாற இடமின்றி இரவும் பகலும் மலைகளிலும் காடுகளிலும் அலைந்துகொண்டிருந்தான்; அவனது கண்ணீரே அவனுக்கு உணவாயிற்று (சங். 42:3); உயிருக்கே ஆபத்து உண்டாயிருந்ததினால் உறவுகளைச் சந்திக்கவும் அவனுக்கு வாய்ப்பில்லாதிருந்தது (சங். 42:4); இத்தகைய சூழ்நிலைகளிலும், ஆண்டவர் மீதுள்ள தனது வாஞ்சையையே தாவீது வெளிப்படுத்துகிறான். தேவனை இன்னும் அதிகமாய் நெருங்கி கிட்டிச் சேருவதினாலே, நம்முடைய ஆவிக்குரிய பெலன் பெருகுகிறது. “நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்” (2தீமோ. 1:12) என்று பவுல் எழுதுகின்றாரே. பிதாவைப் பற்றிய இத்தகைய அறிவுக்குள் நாமும் கடந்துவருவோமாயின், நம்முடைய வாழ்க்கையில் ஆனந்த தொனி நிச்சயம் கேட்கும்.

பணித்தள ஆலய அர்ப்பணிப்பு

பட்கா பத்வா, ரோஹதாஸ்

சிறுவர் காப்பகம்

வேதாகமப் பயிற்சி, மஹாராஷ்டிரா

விசுவாசிகள் பயிற்சி முகாம்

அர்வல் மற்றும் ஷாபூர் ஆகிய பணித்தளங்களில் சபை விசுவாசிகளுக்கு நடத்தப்பட்ட பயிற்சி முகாமில் 255 விசுவாசிகள் பங்கேற்றனர். இரட்சிப்பு, சபை கூடிவருதல், ஆவியின் வரங்கள், ஆத்தும ஆதாயம் செய்வது போன்ற தலைப்புகளின் அடிப்படையில் விசுவாசிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டன. ஆண்டவரை இன்னும் ஆழமாக அறிந்து கொள்ளவும் அத்துடன் தங்களை ஆராய்ந்து அறியவும், கிறிஸ்துவை அறியாத தங்கள் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அயலகத்தாருக் காகப் பாரத்துடன் ஜெபிக்கவும் இப்பயிற்சி முகாம் ஏதுவாயிருந்தது.

பணித்தள ஆலய அர்ப்பணிப்பு

பீஹார் மாநிலத்தின் ரோஹ்தாஸ் மலையின் மீது அமைந்துள்ளது பட்கா புத்துவா பணித்தளம். இப்பணித்தளத்தின் பிள்ளைகள் பள்ளியைக் காணாதவர்கள், 2013 -ம் ஆண்டு இப்பணித்தளத்தில் ஊழியத்தைத் தொடங்கினோம். பிள்ளைகளுக்கு கர்த்தரின் அன்பை எடுத்துக்கூறி, கல்வியறிவையும் புகட்டினோம். மருத்துவ வசதியற்ற, மலேரியா மற்றும் டைபாய்டு போன்ற வியாதிகளால் அதிகம் பாதிக்கப்பட்ட இப்பகுதியில் அவ்வப்போது மருத்துவ முகாம்களை நடத்தினோம். ஒழுங்கற்ற பழக்கவழக்கங்களுடன், சுகாதாரமற்ற முறையில், பெற்றோரால் சரிவர கவனிப்பாரற்று வீதிகளில் சுற்றிக்கொண்டிருந்த சிறுவர்களைச் சந்தித்து, கல்வியறிவைக் கொடுத்ததினால், இன்றோ 6 -வது வகுப்பு வரை பிள்ளைகள் கல்வியில் முன்னேறிவர கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். 100 சிறுவர்கள் இப்பணித்தளத்தில் தற்போது பராமரிக்கப்பட்டுவருகின்றனர். கர்த்தரின் அன்பை பிரதானமாக அறிந்துகொள்ளச் செய்வதுடன், கல்வி அறிவு, உணவு, உடை, மருத்துவம் போன்ற இதர உதவிகளால் கிறிஸ்துவை அறிந்ததோர் வருங்காலத் தலைமுறையினரை உருவாக்கிவருகிறோம்.

சிறுவர்கள் மாத்திரமல்ல, அவர்களது குடும்பங்களும் கர்த்தரை அறிந்துகொள்ளவேண்டும் என்ற பாரத்துடன், ஆலயம் ஒன்றையும் இப்பணித்தளத்தில் புதிதாகக் கட்டியெழுப்ப கர்த்தர் துணை செய்தார். புதிய கட்டிடங்களை ஜெபத்துடன் திறந்துவைத்தோம். ஏப்ரல் 19 அன்று நடைபெற்ற அர்ப்பணிப்பு நிகழ்ச்சிக்கு வருகைதந்திருந்த விருந்தினர்களை பணித்தள சிறுவர்கள் தங்களது பாரம்பரிய நடனத்துடன் வரவேற்றனர். சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் ஜெபத்துடன் நிகழ்ச்சியினைத் தொடங்கிவைத்து, கர்த்தரின் செய்தியைப் பகிர்ந்துகொண்டார். ஜெம்ஸ் இணை பொதுக்காரியதரிசி **Dr.** அசோக் கூடியிருந்தவர்களை வரவேற்றார்; பணித்த ஊழியங்களைக் குறித்தும், சிறுவர்களுக்காக செயல்படுத்திவரும் திட்டங்களைக் குறித்தும் ஜெம்ஸ் நிர்வாக இயக்குநர் சகோ. எமர்சன் பகிர்ந்துகொண்டார். Pr. Luke Brough சிறுவர் ஊழிய திட்டத்திற்காகக் கட்டப்பட்ட கட்டிடத்தை திறந்துவைத்தார்; Pr. Boyd Ratnaraja மற்றும் Pr. Viki Vignaraja போன்றோர் உடனிருந்தனர்; தேவ நாமம் மகிமைப்பட்டது.

PEACE I கோட்டம்

சோன்பத்ரா கோட்டம்

ஜூலை 01 உமரியா

பிசுர், ரனு, திதுல், ரன்தக், கோவரா, தோர்பா, கோங்கா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக அநேகர் சந்திக்கப்பட்டார்கள். ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், வீட்டுக் கூட்டங்கள், சிறுவர் ஊழியம் தவறாமல் நடத்தப்படுகிறது. புதிய மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, ஜெபக் கூடுகை தடையின்றி நடைபெற்றது. புதிய இடங்களில் ஊழியம் தொடங்கப்படவும், சபையில் தன்னார்வ ஊழியர்கள் எழும்பவும், உத்திரப்பிரதேசத்தில் தேவனது வல்லமை கிரியை செய்யவும், பாரம்பரிய பழக்க வழக்கங்கள் மாறி மக்கள் சபை ஆராதனையில் கலந்துகொள்ளவும், இப்பணித்தள ஊழியரின் பெற்றோரின் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 02 தில்வாரியா

ரமேஷ் மற்றும் ராஜ்பதி வீட்டில் வீட்டுக் கூட்டங்கள் நடைபெற்றது. பழைய கிராமங்களில் விசுவாசிகள் சந்திக்கப்பட்டு அவர்கள் வீடுகளில் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. கமலா, எஸ்தர், லலன்கோல் ஆகியோர் புதிதாய் சபை ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். கடும் வெயிலின் மத்தியில் விசுவாசிகளையும், ஊழியர்களையும் தேவன் பாதுகாத்தார். தில்வாரி பணித்தளத்தில் ஆண்டவருடைய அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறவும், விசுவாசிகளின் வறுமை நிலை மாறவும், சபையில் விசுவாசிகள் கூட்டம் பெருகவும், ஊழியருடைய பாதுகாப்பிற்காகவும், அவருடைய உறவினர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜூலை 03 தேவ்காவோன்

லுடரியா, பராஜி கிராமத்தில் படக்காட்சி வாயிலாக ஊழியம் நடைபெற்று பின்னர் வியாதியஸ்தர்களுக்காக ஜெபம் செய்யப்பட்டது. 5 நாட்கள் நடத்தப்பட்ட உபவாசக் கூடுகையில் விசுவாசிகள் உற்சாகமாக கலந்து கொண்டார்கள். பித்வா கிராமத்தில் விசுவாசி வீட்டில் நடத்தப்பட்ட ஆராதனைக் கூட்டத்தில் சுமார் 20 பேர் கூடி ஆராதித்தனர். பிரதிமா மற்றும் ரேணு ஆகியோர் ஞானஸ்நானம் பெற்று சபையில் அங்கமாயினர். பிரிஜேஷ் சோதியா மற்றும் அவரது மனைவி சங்கீதா ஆகியோர் புதிதாய் சபை ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். துதியுங்கள்! ஊழியங்களுக்கு விரோதமாய் செயல்படுகிற மதவாத இயக்கத்தினரை தேவன் சந்திக்கவும், தன்னார்வ ஊழியர்கள் எழும்பவும், இப்பணித்தள ஊழியரின் தாயாரின் சீர ஆரோக்கியத்திற்காகவும், அவரது உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 04 சோப்பன்

பீகார் பெகுசராயைச் சேர்ந்த 6 பேர் வசனத்தால் ஸ்திரப்படுத்தப்பட்டார்கள். புத்வாடோலா கிராமத்தில் சுவிசேஷக் கைபிரதிகள் வாயிலாக 225 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சத்துருவின் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டிருந்த கோவிந்த்சா,அம்வார் சுந்தரிகிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் ஆகியோரது குடும்பங்களில் ஜெபத்தால் போராட்டங்கள் நீங்கியது. இவர்கள் தொடர்ந்து சபை ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். இப்பணித்தளத்தில் மந்திரவாதிகளின் ஆதிக்கத்தால் கட்டப்பட்டிருக்கிற மக்களின் விடுதலைக்காகவும், படக்காட்சி வாயிலாக சுவிசேஷம் தடையில்லாமல் அறிவிக்கப்படவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளின் படிப்பிற்காகவும் மற்றும் திருமுழுக்குப்பெற ஒப்புக்கொடுத்துள்ள புதிய விசுாவசிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 05 பபனி

பலியானாலா, சில்கர்டாட்மார்க்கேட், சிறிஸ்சன்டோலா, ராஜ்கிசன காலனி ஆகிய பகுதிகளில் படக்காட்சி வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, சுவிசேஷக் கைபிரதிகளும், புத்தகங்களும், புதியஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டன. நீண்ட நாட்களாக கால்வலியினால் பாதிக்கப்பட்ட ராஜ்குமார் மகளுக்கு ஜெபத்தினால் சுகம் கிடைத்தது. இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் செய்யப்படுகிற தொடர் ஊழியத்திற்காகவும், கால்கள் இரண்டும்

வீங்கியிருக்கும் ஜூனுல் என்ற சகோதரனுக்கு தேவன் சுகம் தரவும், ரோமன் கத்தோலிக்க மக்கள் உள்ளத்தில் தேவனது வசனம் பேசவும், இப்பணித்தள ஊழியரின் பெற்றோருக்காகவும், பணித்தளத்தில் தேவனுடைய வல்லமை வெளிப்படவும் ஜெபியுங்கள்.

ஜூலை 06 கரஹி

ரேணுகூட் பகுதியில் காலனி என்ற இடத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அம்மை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஓம்பிரகாஷ் மகனுக்கு விசேஷ ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது.. விசுவாசத்தில் வளர்ந்து வருகின்ற ரேகா, புதிதாக சபை ஆராதனையில் கலந்து கொள்கிறதற்காகவும் துதியுங்கள். ராஜ்குமார், சாரதாதேவி, ஷ்யாம் லால், சபிதா ஆகியோர் இரட்சிக்கப்படவும், இவர்கள் குடும்பங்களில் சமாதானம் உண்டாகவும், போதைப் பழக்கத்திலுள்ள மக்கள் மனந்திரும்பவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் படிப்பு மற்றும் ஆவிக்குரிய வாழ்வின் முன்னேற்றத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 07 குய்யாகலா

பீர், உல்கிருர்த் ஆகிய புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு பழைய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. நீண்டநாள் வியாதியால் பாதிக்கப்பட்ட பூல்குமாரிக்கு ஜெபத்தால் கிடைத்த சுகத்திற்காகவும், புதிதாக சபை ஆராதனையில் கலந்து கொள்கிற அபிஷேக், ராஜேஷ்குமார், சோனு, கிராந்தி ஆகியோருக்காகவும் துதியுங்கள்! பாரம்பரிய பழக்க வழக்கங்களினால் பாவத்தில் முழ்கியிருக்கிற ஜெயபாலின் விடுதலைக்காகவும், அவருக்கிருக்கும் வியாதி சுகமாகவும், பெண்கள் மத்தியில் ஜெபஆவி ஊற்றப்படவும், இப்பணித்தள ஊழியரின் உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 08 பீடார்

துதி தயாசாகர் வளாகத்தில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியில் அநேக வாலிபர்களும் ஆசிரியைகளும் பங்குபெற்றனர். புதிய வருட பிள்ளைகளின் சேர்க்கையும், வகுப்புகளும் தொடங்கப்பட்டன. விநாடிவினா போட்டியில் 42 பிள்ளைகள் கலந்து கொண்டு உற்சாகமாய் இருந்ததற்காக துதியுங்கள்! புற்றுநோய் மற்றும் இருதய வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கும் வின்சென்ட் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர் பூரண குணமடையவும், சுகந்தி ஜாய் மற்றும் பீரீத்தி ஆகியோருக்கு திருமண காரியங்கள் ஒழுங்காகவும், இப்பணித்தள ஊழியரின் சீர

ஆரோக்கியத்திற்காகவும், அவருடைய பெற்றோரின் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 09 கஜௌரி

பிசுர், ரனு, திதுல், ரன்தக், கோவரா, தோர்பா, கோங்கா ஆகிய கிராமங்களில் விசுவாசிகள் குடும்பங்கள் சந்திக்கப்பட்டு வசனத்தினால் உற்சாகப்படுத்தப்பட்டார்கள். பணித்தளத்தில் புதிய இடங்களில் ஊழியம் தொடங்கவும், சபையில் தன்னார்வ ஊழியர்கள் எழும்பவும், ஆதிவாசி மக்களுக்கு உள்ள பயம் நீங்கவும், பாரம்பரிய பழக்க வழக்கங்கள் மாறி சபை ஆராதனையில் கலந்துகொள்ளவும், இப்பணித்தள ஊழியரின் பெற்றோரின் சீர ஆரோக்கியத்திற்காகவும், அவரது உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

வனாஞ்சல் கோட்டம்

ஜூலை 10 தோர்பா

சகராடோலி, நரசிங்பூர், இர்சா, டராவ்டோலி, ஹேஸ்தாடோலி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படடு, பின்தொடர் ஊழியங்களும் செய்யப்பட்டன. உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த சுனிதா மற்றும் மனோஜ் ஆகியோருக்கு ஜெபத்தின் உதவியால் சுகம் கிடைத்தது. துதியுங்கள்! ஹேர்மன், சம்பு, சோகி, நேரேலுனிஜ் ஆகியோர் விசுவாசத்திலும் தேவஅன்பிலும் வளரவும், மனுவின் கர்ப்பப்பையில் காணப்படும் பெலவீனம் நீங்கி சுகம் கிடைக்கவும், உடல்நிலை பலவீனமடைந்துள்ள இப்பணித்தள ஊழியரின் சுகத்திற்காகவும், குடும்பத்தின் சமாதானத்தை சீர்குலைக்கும் சத்துருவின் சக்திகள் முறியடிக்கப்படவும், உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 11 ராம்கார்டு

திரலா மற்றும் ஹேமத்பூர் ஆகிய புதிய கிராமங்களில் முதன் முதலாக சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 200 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றது. பூரப்டிஹ், சக்ராம்பூர், சரலாகாலா, குமர்தஹ், டபாது ஆகிய கிராமங்களிலும் பின்தொடர் ஊழியங்கள் செய்யப்பட்டன, விசுவாசிகள் சந்திக்கப்பட்டு அவர்கள் வீடுகளில் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. 2 பகுதிகளில் இயேசுவின் திரைகாவியம் காண்பிக்கப்பட்டதில் 250 பேர் கலந்துகொண்டு கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினர். பலநாட்களாக காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த மெர்ஸிக்கு ஜெபத்தினால் சுகம் கிடைத்தமைக்காக

துதியுங்கள். திருமணமாகி 15 வருடங்களாகியும் குழந்தை இல்லாமல் இருக்கும் சரிதாவின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும், இப்பணித்தள ஊழியரின் அம்மாவுக்கு நெஞ்சில் ஏற்பட்டிருக்கும் வலிநீங்கி சுகம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

ஜூலை 12 கோமோஹ்

டேலாபாக் மற்றும் பேர்மோ ஆகிய புதிய கிராமங்களில் முதன் முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.. சிக்லாயின், விஷன்பூர், தேதுல்மாரி, சீருடாட், கேசமி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியங்கள் செய்யப்பட்டது. ராம்ரத்தன் மனைவி கௌரிதேவிக்கு ஜெபத்தின் உதவியால் சாத்தான் தொல்லையிலிருந்து கிடைத்த விடுதலைக்காக துதியுங்கள்! புதிதாக வாங்கியுள்ள நிலத்தில் விரைவில் சபைக் கட்டிடம் கட்டப்படவும், சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் வசனம் அதிகமாகக் கிரியைகளை நடப்பிக்கும்படியாகவும் மற்றும் திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிறவர்கள் தடையின்றி திருமுழுக்குப் பெறவும் ஜெபியுங்கள்.

ஜூலை 13 சண்டில்

ஹேசாகோச்சா, கேன்த்பேடா, ஆம்டிஹ், காண்ட்கோடா, குஹியாடிஹ், சான்ஹோடிஹ், ரகுனாத்பூர் ஆகிய கிராமங்களில் தொடர் ஊழியம் செய்யப்பட்டது. குஹியாடிஹ் பகுதியில் இயேசுவின் திரைகாவியம் காண்பிக்கப்பட்ட சூழ்நிலையில் 150 பேருக்கு கைப்பிரதிகள் மற்றும் புதியஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டது. ஜெபத்தின் வாயிலாக நித்துமண்டலுக்கு சாத்தான் தொல்லையிலிருந்து கிடைத்த விடுதலைக்காகவும், குழந்தை இல்லாமல் இருந்த புஷ்பாவுக்கு தேவன் ஈவாக கொடுத்த பெண்குழந்தைக்காகவும் துதியுங்கள்! போதைபொருளுக்கு அடிமைப்பட்டிருக்கும் சுனிதாவின் கணவர், குடிப்பழக்கத்திற்கு அடிமையாயிருக்கும் லஷ்வி டுட்டு அப்பாவிற்கும் கர்த்தர் விடுதலைக் கொடுக்கும்படியாகவும், இப்பணித்தள ஊழியக்காரரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

மஹாராஷ்ட்ரா கோட்டம்

ஜூலை 14 கோக்ரூட்

65 பேருக்கு சுவிசேஷம் அறிவித்து சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. பணித்தளங்களாகிய சிராலா, சேத்கேவாடி, சிர்சி மற்றும் கோக்ரூட் போன்ற இடங்களில் ஊழியர்களின் உபவாசஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. ஒரு வாரம் சரன் மற்றும் கோக்ரூட் கிராமத்தில் விபிஎஸ்

நடத்தப்பட்டதில் 21 பிள்ளைகள் கலந்து கொண்டார்கள். அதின் வாயிலாக சரன் மற்றும் கோக்ரூட் பகுதியில் சுவிசேஷத்திற்கு வழி திறக்கப்பட்டு, சிறுவர் ஊழியம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. சிவாஜி பாட்டேல், திலீப்பாட்டேல், மல்லிகா முல்லாவின் குடும்பம், பிரியங்கா ஆகியோரது இரட்சிப்பிற்காகவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகள் மஹிமா, அன்மோல் ஆகியோரின் படிப்பு மற்றும் சுகத்திற்காகவும், கர்ப்பமாகயிருக்கும் ஊழியரின் தம்பி மனைவிக்கு கர்த்தர் சுகப்பிரசவத்தைக் கொடுத்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

ஜூலை 15 லடேகோவான்

கோடோலியில் ஊழியர்களின் ஐக்கியக்கூட்டம் நடத்தப்பட்டது. தாகேவாடி கிராமத்தில் ஒருநாள் உபவாசக்கூட்டம் நடத்தப்பட்டது. வாஷி மற்றும் சிக்ர்ட் போன்ற இடங்களில் சுவிசேஷத்திற்கு வாசல் திறந்தமைக்காகவும், ஏதேநிப்பானி கிராமத்தில் சுவிசேஷத்தை கேட்டவர்களுக்காகவும் துதியுங்கள்! ஜனங்களின் மனமாற்றத்திற்காகவும் அவர்கள் இரட்சிக்கப்படவும், சபை விசுவாசிகள் விசுவாசத்தில் பெலப்படவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் ஆவிக்குரிய ஜீவியத்திற்காகவும், ஊழியரின் மனைவி மாதவியின் பரிபூரண சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 16 சிர்ஷி

லவ்ஹலாவில் ஆராதனைப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. பவார்வாடி, பகிர்வாடி, மங்லே ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து 100 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. சிராலாவில் ஐந்து நாள் விபிஎஸ் நடத்தி பிள்ளைகளுக்கு வசனத்தின் அடிப்படையில் பாடல் வசனம் கற்று கொடுத்து வில்லியம் பூத் அவர்களின் வாழ்க்கை வரலாறு கற்றுகொடுக்கப்பட்டது. சிராலா சபையின் வேலைகள் அதிசீக்கிரத்தில் முடிவுக்கு வரவும், சிராலாவை சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷத்திற்கு வாசல் திறக்கப்படவும், காலில் அடிப்பட்டுள்ள நானா காம்பிலேயின் சுகத்திற்காகவும், இப்பணித்தள ஊழியருடைய குடும்பத்தினருக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 17 ஆஸ்லாஜ்

இப்பகுதியில் நடத்தப்பட்ட சுவிசேஷக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டுவருகிறது. பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 6 பேர் சபை ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். வெகுநாட்களாக ஜெபித்த ஜெபத்திற்கு பலனாக ஆராதனை நடத்த அரசாங்க

வீடு கிடைப்பதற்கு கர்த்தர் கிருபை செய்தார். புதிதாக திருமண வாழ்க்கையை தொடங்கியுள்ள இப்பணித்தள ஊழியருக்காகவும், ககன்பவாடா கிராமத்தில் எழுப்புதல் உண்டாகவும், விசுவாசிகளின் வீடுகளில் காணப்படும் ஏழ்மை நிலை மாறவும் ஜெபியுங்கள்.

ஜூலை 18 மசூர்

சஞ்சய்நகரில் விசுவாசிகளின் வீடுகளில் இரவுக் கூட்டம் நடத்தப்பட்டது. உபவாசக் கூடுகை நடத்தப்பட்டதில் 11 பேர் கலந்துகொண்டு கர்த்தருடைய நாமத்தை மகிமைப் படுத்தினார்கள். மசூர் கிராமத்தில் புதிதாக சபை ஆராதனையில் கலந்து கொள்கிறவர்களுக்காக துதியுங்கள்! மசூர் கிராமத்தில் வாலிபர் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு அவர்கள் இரட்சிக்கப்படவும், சிறுவர் ஊழியம் தொடங்கப்படவும், நடத்தப்பட்ட எழுப்புதல் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் தேவன் கிரியைச்செய்யவும், இப்பணித்தள ஊழியருடைய பெற்றோரின் சுகத்திற்காகவும், இப்பகுதியில் ஊழியத்திற்குக் காணப்படும் தடைகள் மாறவும் ஜெபியுங்கள்.

ஜூலை 19 கோபார்டே

இக்கோட்டத்தின் அனைத்து அலுவலக ஊழியங்கள் இப்பணித்தளத்தில் செயல்பட்டு வருகிறது. சபை ஊழியமும் நடத்தப்படுகிறது. கோடோலியில் ஊழியர்களின் கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டதில் ராஜேஷ் டத்தி அவர்களின் தேவசெய்தி வாயிலாக ஊழியர்கள் பலப்படுத்தப்பட்டார்கள். மிகவும் பெலவீனமாகயிருந்த ஆகுடே கிராமத்தைச் சேர்ந்த ரேஷ்மா ஜெபத்தின் வாயிலாக சுகமானார். துதியுங்கள்! ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கிறவர்களுக்காகவும், புதிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் கிடைக்கும்படியாகவும், இப்பணித்தள ஊழியருடைய அம்மாவின் இடுப்பு எலும்பில் காணப்படும் பெலவீனங்கள் மாறும்படியாகவும், இப்பணித்தள ஊழியரின் குடும்பத்தார் அனைத்து தீமைகளுக்கு நீங்கலாக்கி பாதுகாக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜூலை 20 ஷிலோஷி

கெதோலி கிராமத்தில் ரங்ராவ்பட்டேல் வீட்டில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. ஜெபத்தின் வாயிலாக, விசுவாசத்தை விட்டு பின்மாறி போன தானாஜிமோர் மூன்று மாதம் கழித்து தானாகவே ஆராதனையில் கலந்து கொண்டார். சிலோஷியில் ஜெம்ஸ் பயிற்சி மையம் நடத்த நல்ல இடம் கிடைக்கவும், குழந்தைப் பாக்கியத்திற்காக எத்தனையோ பூஜைகள் செய்தும் பலன்

இல்லாமல் காத்திருக்கிற பூஜா மற்றும் மாயா ஆகியோரின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும், ராணி காம்பிலே மற்றும் மங்கள் ஆகியோர்களின் குடும்பத்தார் இரட்சிக்கப்படவும் மற்றும் இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் படிப்பு, ஆவிக்குரிய ஜீவியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 21 குதேஹ்

லவ்ஹலா வேதாகமக் கல்லூரி மாணவர்களோடு இணைந்து சுவிசேஷ ஊழியம் செய்யப்பட்டது. ஊழியர்களின் கலந்தாலோசனைக் கூட்டம் ஒருநாள் நடத்தப்பட்டது. தீமோத்தேயு கல்லூரி மாணவர்கள் ஆவிக்குரிய வரங்களைப் பெற்று வளர்ச்சியடையவும், தேவனுக்கு உபயோகமான பாத்திரமாக மாறவும், லவ்ஹலா சபையின் வளர்ச்சிக்காகவும் விசுவாசிகள் விசுவாசத்தில் பெலப்படவும், லவ்ஹலாவைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க திறந்த வாசல் காணப்படவும், இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் சுகப்பிரசவத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 22 தேவ்ரூக்

இப்பணித்தள ஊழியர் தங்கியுள்ள கோடோலி கிராமத்தில் தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. கோலாப்பூர் எழுப்புதல் கூட்டம் ஆசீர்வாதமாக நடந்தது. சாக்ரப்பா கிராமத்தில் எதிர்ப்புக்கு மத்தியிலும் 30 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இப்பணித்தள சபையில் இருந்து ராஜேஷ் என்ற வாலிபன் வேதாகமக் கல்லூரியில் படிக்க சென்றுள்ளார். துதியுங்கள்! சங்கேஷ்வர் மற்றும் தேவ்ரூக் பகுதியில் சபை நிறுவப்படவும், அர்ஜுன்மானேயின் குடும்பத்தினர் இரட்சிக்கப்படவும், எழுப்புதல் கூட்டங்கள் நடைப்பெறவும், இப்பணித்தள ஊழியரின் மகன் மற்றும் மனைவியின் சீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 23 பக்னி

ஒரு வருடமாக ஆராதனை நடத்த முடியாமல் இருந்த ஹல்கி கிராமத்தில் மீண்டும் ஜெபக் கூடுகை ஆரம்பிக்க தேவன் உதவிசெய்தார். சபை ஆராதனைக்கு 18 பேர் வருகிறார்கள். பில்வாடி கிராமத்திலுள்ள பாலாஜி நகரில் படக்காட்சியின் வாயிலாக 100 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஹல்கி கிராமத்தில் தெருப்பிரசங்கத்தின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பால்வாடி பகுதி மக்கள் விபச்சார பாவத்திலிருந்து விடுதலையாகவும், இப்பணித்தள ஊழியரின் பெற்றோர் இரட்சிக்கப்படவும், அவருடைய

இரண்டு பிள்ளைகளின் படிப்பு மற்றும் ஆவிக்குரிய ஜீவியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 24 மால்வாடி

தற்கொலைக்கு முயற்சித்த விப்புல் காம்பிலே வீட்டிற்கு, தற்செயலாக சென்ற இப்பணித்தள ஊழியரால் பாதுகாக்கப்பட்டார். இதினிமித்தம் விப்புல் வேதாகமத்தை விரும்பி படித்து வருகிறார். ஜெய்சிங்காபூர் பகுதியில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. ஆம்காபூர் பகுதியை சேர்ந்த சுவாதி குடும்பத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. புதிதாக சுவிசேஷத்தைக் கேட்ட அம்பா புதிய தொடர்பில் உள்ளார். .சாதாரா மாவட்டத்தில் சுவிசேஷம் அறிவிக்க வாசல் திறக்கப்படவும், பிரதாப்சிங் நகர் பகுதியில் போதை பழக்கத்திற்கு அடிமையாக இருக்கும் மக்கள் விடுதலை பெறவும், அடிக்கடி வியாதிப்படுகிற இப்பணித்தள ஊழியக்காரரின் மகள் ஸ்துதிக்கு பரிபூரண சுகம் கிடைக்கவும். இப்பணித்தள ஊழியருக்கு சாதாரா பகுதியில் நல்ல வாடகை வீடு கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

ஜார்க்கண்ட் கோட்டம்

ஜூலை 25 கடுவா

நகர்உட்டாரி, சத்தர்பூர் ஆகிய இடங்களில் அல்பா:. கூட்டங்கள் நடத்தப்பட்டு விசுவாசிகள் வசனத்தில் பெலப்படுத்தப்பட்டார்கள். ஜப்லா மற்றும் முகமதுகஞ்ச் சபைகளில் விசுவாசிகளுக்கான. விசேஷக் கூட்டம் நடத்தப்பட்டது. துர்கி பகுதியில் விசுவாசத்தில் வந்த 11 பேர் திருமுழுக்குப் பெற்றார்கள். துதியுங்கள்!. சத்தர்பூர் சபை விசுவாசிகள் மத்தியில் எழுப்புதல் உண்டாகவும், இப்பணித்தளத்தில் செயல்படுகிற ஜெம்ஸ் ஆங்கிலப்பள்ளியில் படிக்கிற மாணவ மாணவியர்களுக்காகவும், கல்வி ஊழியத்தின் வாயிலாக கர்த்தருடைய நாமம் மகிமைப்படவும், தஸ்ரார் பணித்தளத்தில் சபை கட்டப்படவும், கடுவா பணித்தள ஊழியரின் மூன்று பெண் பிள்ளைகளின் திருமணத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 26 நகருதாரி

ஹன்கேநகர், மோகலி, சங்மா, குல்குலாகுர்த்தா ஆகிய கிராமங்களில் பின் தொடர் ஊழியத்தின் வாயிலாக 60 பேருக்கு புதிய ஏற்பாடு வேதாகமம் விநியோகிக்கப்பட்டன. கும்பா கிராமத்தில் சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. விசுவாசமுள்ள ஜெபத்தால்

சீரத்தில் அற்புத சுகத்தைப் பெற்ற கீதாதேவி ஹன்கேநகர் பகுதியிலிருந்தும், அஜித்திக்கா மற்றும் இம்மானுவேல்திக்கா கும்பா பகுதியிலிருந்தும் சபை ஆராதனைக்கு புதிதாக வருகிறார்கள். துதியுங்கள்! திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிற புதிய விசுவாசிகளுக்காகவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் படிப்பு மற்றும் ஆவிக்குரிய ஜீவியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 27 பர்வாடி

சோன்பூர்வா, சடிஜனா, பகல்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சோனிடோலா என்ற புதிய கிராமத்திலும் சுவிசேஷக் கைபிரதிகள் விநியோகித்து முதன்முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தொடர் ஊழியத்தின் வாயிலாக மூன்று பேர் புதிதாக சபை ஆராதனைக்கு வருகிறார்கள் துதியுங்கள்! காலில் ஏற்பட்டுள்ள காயத்தால் காலை அறுவை சிகிச்சை செய்து எடுக்க நிலையில் உள்ள ரமேஷ்வர்ராம் என்பவருக்காகவும், சபையில் விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும், பெண்கள் கூட்டம் நடத்தப்படவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 28 ஷேக்பூரா

தஸ்ரார் பகுதியில் விசுவாசிகள் வசனத்தால் போதிக்கப்பட்டார்கள். ரஜ்ஹரா, கடுவா மற்றும் ஜப்லா ஆகிய பணித்தள ஊழியர்கள் இணைந்து ஜெபித்தார்கள். இப்பணித்தள சபை புதிய விசுவாசிகள் 6 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஜெபத்தினால் சத்துருவின் போராட்டத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொண்ட ஷோபாவிற்காக கர்த்தரைத் துதியுங்கள். ரஜ்ஹரா பகுதியில் விரோதங்கள் மாறவும், ஜார்கண்ட் பகுதியில் சமூக விரோதிகளின் மனமாற்றத்திற்காகவும், தேச தலைவர்கள் இரட்சிக்கப்படவும், இப்பணித்தள ஊழியரின் நிலப்பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கவும், ஊழியரின் இரண்டாவது மகனின் படிப்பிற்காகவும், அவருடைய உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 29 துர்க் காலா

பனியாஹி, கோட்வாதமார், பூகனா, குஸ்டாயி ஆகிய நான்கு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டது. பராஸ்பானி, காலா, சுரூ போன்ற கிராமங்களிலிருந்து நான்கு பேர் சபை ஆராதனைக்கு புதிதாக வருகிறார்கள். காலா பகுதியில் ஹேவந்திதேவி,

தவா, மோகர்மானியா, நராயனான், துக்கித்ராம், சீதாதேவி, குட்டியா கிராமத்தில் ராம்கேஷ்ராம், தேவபேந்தரராம் ஆகியோர் ஞானஸ்நானம் பெற்று தேவ நீதியை நிறைவேற்றினார்கள். துதியுங்கள்! காய்ச்சல் மற்றும் பல்வலியால் கஷ்டப்படுகிற காலா கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீதேவ்குமார் ராமின் சுகத்திற்காகவும், மூன்று வயதான பிரகாஷ்க்கு சிறுநீரகத்தில் இருக்கும் பிரச்சனை சுகமாகவும், இப்பணித்தள ஊழியரின் 3 சகோதரர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜூலை 30 ஜப்லா

சத்தர்பூர் சபைக் கட்டிடத்திற்காக வாங்கப்பட்ட நிலம் பதிவு செய்யப்பட்டது. முபா பிராஸ், சுனிதாதேவி, லீலாதேவி சுனிதா ஆகியோர் சபை ஆராதனைக்கு வருகிறார்கள். இரண்டு இடங்களில் படக்காட்சியின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஜனக்கின் அப்பாவுக்கு ஏற்பட்ட விபத்திலிருந்து தேவன் அவரது ஜீவனை பாதுகாத்தார். சத்துருவின் போராட்டத்திலிருந்து ஜெபத்தின் வாயிலாக விடுதலை பெற்ற மித்தூன் குமாருக்காக துதியுங்கள்! ஜப்லா பகுதியிலுள்ள எல்லா பஞ்சாயத்திலும் பிரச்சாரமையங்கள் ஆரம்பிக்கப்படவும், கஞ்சன் குமார் மனநிலை பாதிப்பிலிருந்து சுகமாகவும், இப்பணித்தள ஊழியரின் தம்பியின் சீரர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 31 பண்டாரியா

காஜியாகிராமத்தில் கபில்காகா என்பவர் வீட்டில் நடத்தப்பட்ட ஜெபக்கூட்டத்தில் 14 பேர் கலந்து கொண்டார்கள். ஜமௌவதியில் வீட்டு கூட்டங்கள் நடத்தப்பட்டதில் 5 பேர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள். வயிற்று வலியால் பாதிக்கப்பட்ட ராஜன் என்பவரது மகனுக்கு வயிற்றுவலியிலிருந்து தேவன் சுகம் கொடுத்தார். பன்டாரியா பகுதியில் நடைபெறவிருக்கின்ற நவம்பர் மாத பொது சுவிசேஷக்கூட்டத்திற்கு எந்த தடையும், எதிர்ப்புகளும் இல்லாமல் ஆயத்த வேலைகள் நடைபெறவும், சபையில் புதிய ஆத்துமாக்கள் சேர்க்கப்படவும், இப்பணித்தள ஊழியரின் மனைவி மற்றும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள்.

Read and Download GEMS Satham at

www.gemsbihar.org

GEMS Action Centers

Chennai	No. 8, 3rd Jeevan Nagar, Adampakam, Chennai - 600088 Ph. 044-22670099
Coimbatore	No.2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : +919344824072
Dindugal	43/20C. Samiyar Thottam, Nagal Nagar, Dindugal - 624003 Cell : +919942824035
Erode	No. 34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode - 638011 Cell: +919486976202
Kodaikanal	No. 1/199-1F, Packiapuram, Kodaikanal - 624101. Cell : +919443221776
Kovilpatti	No 11, Theppakulam street, Kovilpatti - 628501, Ph. : 04632-225890
Marthandam	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K. Dist., - 629165 Cell : +919788689771, +919486357950
Nazareth	No. 3, Dasan street, Nazareth - 628617, Ph. : 9442094110
Sivakasi	3/1350/9, Sathur Road, Parraipatti, Sivakasi - 626189 Cell : +919843088840
Nagercoil	66-E, Bright street, Nagarcoil - 629009 Cell : +919894965520
Tuticorin	38, Sarangapani street, Tuticorin - 2, Cell : +919442210629
Tuticorin	J.S.Traders, Hotel Geetha Complex, Polepettai, Tuticorin - 628002 Cell : +919442166061
Vellore	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore - 632009 Cell : +919952545181

REGIONAL ACTION CENTERS

Chennai	Plot No. 19-A, 3rd street, Megala Nagar, Vengaivasal - 600073, Cell : +919444763141
Coimbatore	No. 7, Laxmi puram, 1st Cross, EB Colony, TVS Nagar, Coimbatore - 641025 Cell : 9442934613
Trichy	Mahanaim, 1, Abdul Gazoor street, Kajah Nagar - 620020 Cell : +919443555577
Tirunelveli	14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai - 627002 Cell: +919443113322a

General Action Center - TamilNadu

GEMS, No. 14, Jeba Nagar, Vasanthapuram South, Near Vijaya Garden, Tirunelveli - 627005 Email : nellaioffice@gemsbihar.org Mobile : 9488771655

Promotional Coordination Center - TamilNadu

No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai-625018
Email : tnpromotions@gemsbihar.org Mobile : +919865583563

OTHER STATE ACTION CENTERS

Bangalore	No. B-9, Gogappa Layout, Near Railway Gate, K G Halli, A C Post, Bangalore - 560045 Tel: +91 9448517025
Navi Mumbai	Plot No 58, Nandanvan CHS, Lane - 3, Sector - 17, Nerul (East), Navi Mumbai - 400 706 Cell : +919322730294 +919820701775
Pondicherry	No. 5, Kamarajar Street, Tagore Nagar, Lawspet, Pondicherry - 605008 Cell : +919486796631
Kerela	No. 4, N.V. Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005 Mobile : +919486357950

GEMS National Action center

No: 29, Church street 1st Cross, Near Simpolo Tiles shop,
Kalkere Main Road, Horamavu, Bangalore -560043
Tel: +91 9443429735 E-Mail : promotions@gemsbihar.org

Regd. office :

GEMS Educational Media Services

11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

if undelivered please return to

GEMS Action Center

14, Jeba Nagar,
Vasanthapuram South,
Near Vijaya Garden,
Tirunelveli - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

Private circulation

தனிப்பிரதி ரூ. 10-
ஆண்டு சந்தா ரூ. 100-

To

....

....

....

....